1978 செப்டம்பர் 12]

இருக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்திலே, இவ்வளவு பெரிய பண்ணையிலே அங்கேயே உற்பத்தி செய்து சப்சிடி ரேட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்கிற நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா விவசாயப் பண்ணை, குடுமியான்மலை பண்ணை, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறது. தவறாக திருச்சி மாவட்டம் என்று அந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தரமான பழச்செடிகள் உற்பத்தி செய்வதற்கு இந்த ஆண்டிலே மட்டும் 293 ஏக்கரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பழச்செடிகள் கொடுக்கும் திட்டத்தைத் தீட்டி அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர் காப்புத் திட்டம்.

*வினா எண் 169—திரு. மா. மணிமாறன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பயிர் காப்புத் (Insurance) திட்டத்தினை செயல் படுத்துவது குறித்து மைய அரசிடம் இருந்து குறிப்பு ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். பயிர்காப்பு பற்றி முன்னோடித் திட்டமொன்றினை இவ்வரசின் கருத்தினைக்கோரி மத்திய அரசு 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அனுப்பி வைத்துள்ளது. அதன் மீது அரசின் கருத்து இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் ஆர்வம் அதிகம் உள்ளவர்கள். ஆகையால் இந்த மாநில ஏழை விவசாயிகளின் துயர் துடைக்க அரசு விரைவிலே நடவடிக்கை எடுத்து, இந்தப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது; அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்துவோம்" என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தல் பிரகடனத்தில் கூறியிருந்தார்கள். அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கிறோம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலேதான் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசிடமிருந்து அது சம்பந்தமாக குறிப்பிடத் தகுந்த அளவுக்கு செயல்படுத்த குறிப்பு ஏதேனும் இந்த அரசுக்கு வந்துள்ளதா? அந்தக் குறிப்பிலிருந்து பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்த எவ்வளவு காலம் ஆகும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, பயிர் காப்புறுதித் திட்டத்தை ஏற்கெனவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலும் சொன்னோம்; அதன் பிறகு—ஆட்சிக்கு வந்த பின்னாலும் கொண்டுவருவோம் என்று அறிவித்துள்ளோம். அதுபற்றி மத்திய அரசின் உதவியை நாடினோம். ஏற்கெனவே பொருளாதார தத்துவ மேதை தாண்டேகர் ஒரு முன்னோடித் திட்டத்தைத் தெரிவித்துள்ளார்கள். அதன்படி இத் திட்டம் ஒரு மாவட்டம் அல்லது வருவாய்க் கோட்டத்தை ஒரு யூனிட்டாகக் கொண்டு இணைந்த முறையில் நிறைவேற்றப்படும். முதலாண்டில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் ஒன்று அல்லது இரண்டு முக்கிய பயிர்கள் இத்திட்டத்தின்கீழ் வரும். உணவுப் பயிர்கள் அல்லாத பிற பயிர்களுக்காக, முந்திய 10 ஆண்டுகளுக்கான பயிர் பதிவு பற்றிய புள்ளி விவரங்கள் போதிய அளவுக்குக் கிடைக்கப்பெற்றால், அத்தகைய பயிர்களை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர வகை செய்யப்படும். ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு பருவக் காலத்திற்கும் இத்திட்டம் தனியானதொரு சிறப்புத் திட்டமாக செயல்படுத்தப்படும். மேலும், இது தாமாகவே முன்வந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும். வறட்சி, வெள்ளம், பனி, புயல், பயிர் பூச்சிகள், பயிர் நோய்கள், கலவரம், வேலை நிறுத்தங்கள் முதலியவற்றால் ஏற்படும் இழப்புகளை இத் திட்டம் ஈடுசெய்யும். ஆனால் போர், அணுகுண்டு ஆபத்துகளால் ஏற்படும் இழப்புகளை இது ஈடு செய்யாது. கடன் பெற்றவரது பயிர்கள் மற்றும் கடன் பெற்றவர்கள் அல்லாத பிற உறுப்பினர்களது பயிர்கள் ஆகியவை இத் திட்டத்தின் கீழ் வரும். இத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு கடந்த 26—6—1978 அன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது; இத்திட்டம் தொடர்ந்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

1978 செப்டம்பர் 12]

திரு. ரா. க. சு. தண்டபாணி: தலைவரவர்களே, இத்திட்டத்தின் அடிப்படையில் உயர்ந்தபட்சம் எவ்வளவு கொடுக்கப்படும்? அதோடு, என்னுடைய காங்கேயம் தொகுதியில் கால்நடைகளின் மதிப்பு மிக அதிகமாக இருக்கிறது; ஒரு ஜோடி மாடு சுமார் 10,000 ரூபாய் கூட விலை போகும்; ஆகவே கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இத்திட்டத்தின் கீழ் உழவர் ஒருவர் காப்புறுதி செய்யவேண்டிய அதிகப்பட்சத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாய் என்று வரையறை வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கால்நடைகள் இன்ஷூரன்ஸ் திட்டம் அமலில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் கடன்பட்டவர்கள் பெயர் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்று குறிப்பிட்டார்கள். அதற்கான விளக்கத்தை அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அது பற்றிய விளக்கத்தை படித்துக் கொண்டே போகலாம்; நேரம் போதாது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விளக்கம் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. மற்ற கேள்விகளுக்கான பதில்கள் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

திரு. என். கிட்டப்பா: கேள்வி நேரத்தையே நீக்கிவிட்டு, எல்லாவற்றையும் அச்சிட்டுக் கொடுத்துவிடலாமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபை அனுமதித்தால் அதையும் செய்யலாம்.

* வடகரை கிராமத்திலுள்ள கரிசல்குளம்.

* வினா எண் 170—திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா வடகரை கிராமம் கரிசல் குளத்தை விவசாய முக்கியத்துவம் கருதி விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

*170 முதல் 175 வரையிலான வினாவும் அவற்றுக்கான விடைகளும் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அச்சிடப் பெற்றுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS